எழுந்து ஒளி வீசு

# திருமலைத்தீபம்

# THIRUMALAI THEEPAM

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 20
விலை 20/=

புரட்டாதி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 20
E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532

**'கடவுள் உங்களை தம்மோடு ஒப்புரவாக்கினார்'** (கொலோ 1:22)



## ஆயரின் செய்தி

கிறிஸ்து இயேசுவின் அன்பார்ந்த வாசகர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்தி புதிய ஆயராக திருமலை தீபத்திற்கு இச்செய்தியை வரைவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யூலை மாதம் 25ம், 26ம் திகதிகள் மறை மாவட்டத்தின் சரித்திரத்தில் பதியப்பட்ட நாட்கள். எமது அர்ப்பணம், முன்னெடுப்பு, உழைப்பு, ஒற்றுமை, ஒத்துழைப்பின் உச்சமாக திருப்பொழிவு சடங்கும் எனது பொறுப்பேற்கும் சடங்கும் அமைந்திருந்தது. இலங்கையே திருகோணமலையைத் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு துல்லியமான திட்டங்கள், பொறுப்பேற்றல் செயல்படுத்தல் இடம் பெற்றிருந்தன.

நாம் அடுத்தவரைவிட முதன்மையானவர்களாக இருப்பதைவிட அனைவருக்கும் முன் உதாரணமாகவே இருக்க வேண்டும். ஏனென்றால் முதன்மையென்பது போட்டி மனப்பான்மையைத் தந்துவிடும். மாறாக முன் உதாரணம் என்பது எம்மைப் பார்த்து அடுத்தவர் வளர வேண்டும் எனும் நல்லெண்ணத்தைத் தருகின்றது. இதைத்தான் நாம் யூலை மாதம் 25ம் திகதி செய்து காட்டினோம். ஏனைய ஆயர்கள், குருக்கள், துறவறத்தவர் நலன் விரும்பிகளிடமிருந்து வரும் நல்ல பல கருத்துக்களை கேட்கும்போது பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

தொடர்ச்சி பக்கம் 02

## புதிய ஆயரை வரவேற்றலும் நன்றி நவில்தலும்

திருமலையின் சுடர் எனவே
துலங்கவென எம் மண்ணில்
புகழ் படைத்த மேலான எங்கள்
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகையின்
பணி வாழ்வு சிறந்தோங்க வாழ்த்துவோமே

அந்நிகழ்வானது தமிழ், சிங்களம், ஆகிய இரு மொழிகளிலும் ஆரம்பச் செபத்துடனும் மங்கள விளக்கேற்றலுடனும் இனிதே ஆரம்பமானது

அதனைத் தொடர்ந்து எமது பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி ஏ. றொகான் பேனாட் அவர்கள் அனைவரையும் வரவேற்றதோடு எமது ஆயரின் திருநிலைப்படுத்தல் நிகழ்வு சிறப்புற அமைய பணியாற்றிய அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.



தொடர்ச்சி பக்கம் 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**' நீதி இறைபற்று நம்பிக்கை மன உறுதி பணிவு ஆகியவற்றை நாடித் தேடு '** (1திமோ 6: 11)

# உங்களோடு பேசுகிறேன்..

**அருட்பணி N.C அருள்வரதன்**

மீண்டும் உங்களோடு பேச ஒரு வாய்ப்பு கடந்துவிட்ட மாதத்திலே நமது மறை மாவட்டத்தில மிகவும் சிறப்பான நிகழ்வு இடம் பெற்றது. எமது மறைமாவட்டம் தனி மறைமாவட்டமாகப் பிரிபட்டு குறுகிய காலத்திலே புதிய ஆயரும் மறைமாவட்டத்திற்கு கிடைத்துள்ளார். அனைத்து மக்களுக்கும் பெருமகிழ்வூட்டும் நிகழ்வாக அமைந்திருந்தது.

புதிய ஆயரின் திருப்பொழிவின் போது மறைமாவட்டங்களிருந்து பல ஆயர்களும் நிறைந்த குருக்கள், அருட்சகோதரிகள், சகோதரர்கள் இப்படி பெருந்தொகையானோர் கலந்து கொண்டதோடு வைபவமும் சிறப்புற வழிகளைச் சமைத்து நின்றார்கள்.

இந்நிகழ்வின் போது பொது நிலையினர் வழிபாட்டுக் குழுவினர், ஒழுங்கமைப்பாளர் இப்படி பல பிரிவுகள் வகுக்கப்பட்டு அனைத்து குழுவினரும் நிறைந்த பணி ஆற்றி வைபவம் சிறப்புற அமைய பங்களித்தமை மிகவும் பாராட்டுக்குரியது

பாலைவனச் சோலையாக மலையில் பூத்த குறிஞ்சி மலராக மலர்ந்து நிற்பதுதான் மறைக்கல்வி. இறைமாண்பை எடுத்துச் சொல்லி மனித மாண்பிற்கு அழைத்துச் செல்கின்றது. போதனையால் விளக்கப்பட்ட விசுவாசத்தை மனித வாழ்வில் உயிருள்ளதாக செயலாற்றச் செய்கின்றது. சிறுவர், இளையோர், முதியோர் ஆகியோரின் விசுவாச வாழ்வில் மறைக்கல்வி பயிற்சியளிக்கின்றது எனவே மறைக்கல்வி தினத்தை கொண்டாடும் அனைவருக்கும் மறைக்கல்வி தின வாழ்த்துக்களையும் கூறி விசுவாச வாழ்வில் வழி நடப்போம்.

ஏழைகளை நேசித்திருப்பவர்கள் அச்சமின்றி சாவை எதிர்நோக்கலாம். பொறாமையைத் தவிர்க்க விழிப்பாயிருங்கள் ஏனெனில் அது சகோதர அன்பை அழிக்கத் தேடுகிறது எனும் தூய வின்சன் டி பவுலின் சிந்தனைக் கேற்ப ஏழை எளியவர்க்கு உதவிகள் செய்து வாழ்வோம்.

ஆவணியிலே இன்னும் ஒரு சிறப்பு நிகழ்வு நடந்து விட்டது அதுதான் பொதுத்தேர்தல் எத்தனையோ கனவுகள் எத்தனையோ வாக்குறுதிகள் எத்தனையோ எதிர்பார்ப்புகள் இப்படி நிறைந்து கிடந்தாலும் பொதுத்தேர்தல் அமைதியாக எதுவித இடையூறுமின்றி நடைபெற்றது மிகவும் சிறப்பானதே மக்களின் நிறைந்த மனங்களை திறந்த வெளிப்பாடுகளை தங்களது வாக்குரிமை மூலம் நிறைவேற்றி இருப்பதை தேர்தல் முடிவுகள் மூலம் காணமுடிகின்றது.

இனி அடுத்த கட்டமாக புதிய ஆட்சியாளர்களின் ஆட்சி முறைகளும் அவர்களது ஆட்சியிலே அனைத்து மக்களின் மனங்களிலும் நிலைகொள்ளக் கூடிய நிறைவான மகிழ்வான அமைதியே முதலிடம் பெறுகின்றது அதனைப் பெறுவது அனைவரின் எதிர்பார்ப்பே இழப்புகளையோ தோல்விகளையோ இனியும் பேசி காலங்களையும் வீண்விரயம் செய்யாமல் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் மன உணர்வோடு ஆட்சியாளர்கள் செயற்படும் போது நாட்டிற்கு பெரு மகிழ்வின் நேரம் உதயமாகிவிட்டதென்பதை துணிந்து கூறமுடியும்

எனவே மறை மாவட்டத்திலே புதிய ஆயரின் தலைமையில் புதிய வழிகளும் எதிர்நோக்குகளும் செயற்பாடுகளும் அமையவும் வெற்றிகளைக் காணவும் இறைவனை வேண்டுவதோடு அன்னை மரியாளின் பிறந்த நாளையும் புரட்டாதி எட்டாம் நாளிலே கொண்டாடுகின்றோம். அன்னையின் ஆசீரும் வழிகாட்டலும் நம் அனைவரையும் மென்மேலும் வளப்படுத்த வேண்டி நிற்போம்.

புதிய ஆட்சியிலே மக்கள் அனைவருக்கும் நாட்டிற்கும் நன்மைகளும் மன மகிழ்வுகளும் மனநிறைவுகளும் கிடைக்க புதிய ஆட்சியாளர்கள் வழிகாட்ட வேண்டுமென்று வேண்டுவதோடு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக்கூறி நிற்கிறேன்.

☞ 1ம் பக்கத் தொடரச்சி

## ஆயரின் செய்தி....

அனைத்திற்கும் மேலாக எமது பங்களிப்புகள் மூலமாக எமது மறைமாவட்டத்தின் ஆற்றல்களை இனம் காண முடிந்தது இது எமது பலம், பெரும் வெற்றி. மறைமாவட்டம் மேலும் வளர எமது ஆற்றல்களை அர்ப்பணிப்போடு நாம் பயன்படுத்த வேண்டும். நான் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்று குருக்களுடன் சில முக்கிய கூட்டங்களை நடாத்தியுள்ளேன். இக்கூட்ட வேளைகளில் மறைமாவட்டத்திற்கான எனது யோசனைகளையும் முன்வைத்துள்ளேன். எதிர்வரும் கூட்டங்களில் கலந்துரையாடல்கள் மூலமாக ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்று பல முடிவுகளையும் எடுக்கவுள்ளோம்.

மூன்று முக்கிய விடயங்களை நான் முன்வைத்துள்ளேன்.

**1.மறைமாவட்டத்தின் ஆன்மீகம் 2. கல்வி 3.சமூகப்பணி**

1. **மறைமாவட்டத்தின் ஆன்மிகம்** என்பது பரந்துபட்ட ஒரு சொல். இதுவே எமது முதன்மையான பணியாகும். இறைவாக்கு முழங்குதல், மறைக்கல்வி, திருவருட்சாதனங்கள் வழங்குதல், தியானங்கள் என்று குருக்கள், துறவறத்தினர் என பல தரப்பினருக்கும், வயதினருக்குமான ஆன்மீக வளர்ச்சியில் அக்கறை கொண்டு அவற்றை இன்னும் சிறப்பானதாக்குதல் அவசியம். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் தேவை. எமது மறைமாவட்டத்திலிருந்து தேவ அழைத்தல்கள் பெருக வேண்டும். அதற்கு பெற்றோர் முதன்மையான பங்களிப்பு செய்ய வேண்டும். மேலும் ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டும்.

2. **கல்வி:** எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நாம் திட்டமிட்டு செயல்பட வேண்டும் ஏற்கெனவே எமக்குக் கிடைக்கும் நிதி உதவிகள் மூலம் பல மாணவர்கள் பயனடைகின்றார்கள். மேலும் பங்குகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு விசேட பயிற்சிப் பாசறையும் 2013 டிசம்பர் முதல் நடைபெறுகின்றன. இம்மாணவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆற்றல் நிறைந்த சிலர் விசேட தலைமைத்துவப் பயிற்சி பெற இருக்கின்றார்கள். கல்வி வளர்ச்சிக்காக சில பங்குகளில் விசேட மாலை நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன. இவ்வாறு எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நாம் துல்லியமாக திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

3. **சமூகப்பணி :** எமது பணி, நல்லெண்ணம் எல்லைகளையும் கடந்து அனைவரையும் சென்றடைய வேண்டும். அனைத்து மக்களுடைய வளர்ச்சியில் நாம் அக்கறை கொண்டு செயல்படும்போது அப்பணி மூலம் இறையன்பிற்கும் சமாதானத்திற்கும் சான்று பகரலாம்.

இந்த எண்ணக் கருவிற்கு செயல்வடிவம் கொடுக்க அனைவரையும் அழைக்கின்றேன். திறந்த மனதோடு புதிய சிந்தனைகள், மாற்றங்கள், முன்னெடுப்புகளுக்கு இடம் கொடுத்து மறைமாவட்ட வளர்ச்சிக்கு அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம்

தேசிய மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தால் மறைக்கல்வி வாரமும், மறைக்கல்வி தினமும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மாணவர்களின் விவிலிய வளர்ச்சிக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும். எமது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் தாராள மனதோடு செய்வோம்.

செப்டெம்பர் மாதம் குவாடலூப்பே அன்னையின் திருவிழா. குவாடலூப்பே அன்னையின் புதுமைகள் எமது விசுவாச வளர்ச்சிக்கு துணையாகின்றன. அன்னையின் ஆசீர் எம் எல்லோருக்கும் இருக்க வேண்டுமென செபிப்போம்.

தூய வின்சன்ட் டி பவுல் திருவிழா கொண்டாடப்படுகிறது. வின்சன்ட் டி பவுல் சபையினர் ஏழைமக்களின் வாழ்வை உயர்த்த பெரிதும் அர்ப்பணத்தோடு பாடுபடுகின்றார்கள். இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். இவர்கள் உங்கள் இல்லங்களுக்கு உதவி கேட்டு வரும்போது தயக்கமின்றி தாராள மனதோடு உதவி ஏழைகளின் வாழ்வு மலர உதவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

செப்டம்பர் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை வெல்வெரியில் வருடாந்த ஒன்றுகூடலை நடாத்தத் தீர்மானித்துள்ளோம். யூலை மாதம் 25ம் திகதி நடைபெற்றிருக்க வேண்டிய திருவிழா எனது திருப்பொழிவு காரணமாக பிற்போடப்பட்டது எனவே செப்டம்பர் 5ம் திகதி காலை 7..30 மணிக்கு கூட்டுத் திருப்பலி வெல்வெரியில் நடைபெறும். இது ஒரு நன்றித் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். இதற்கான அறிவித்தல்கள் பங்கு ஆலயங்களில் கொடுக்கப்படும்.

எமது மறைமாவட்டத்திற்கு தேவ அழைத்தல் பெருக வேண்டுமென செபிப்பது எமது தலையாய கடமையாகும். எனவே இளைஞர்கள் இறைவன் விடுக்கும் அழைப்புக்கு செவிமடுத்து செயல்பட செபிப்போம். நாமும் எமது சான்று நிறைந்த வாழ்வால் இவர்களை குருத்துவ, துறவற வாழ்வுக்கு உற்சாகப்படுத்துவோம்.

இறுதியாக எனக்காகவும் செபிக்கும்படி உங்களை தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். இறையாசீரும், வழிகாட்டலும், பாதுகாப்பும் இல்லாமல் எனது மேய்ப்புப்பணி அர்த்தமற்றதாகிவிடும் எனவே நான் எப்போதும் இறைவனின் விருப்பத்தை அறியவும், அவர்வழி செல்லவும், அவர் விருப்புக்கு ஏற்ப என் பணி செய்யவும் தவறாது எனக்காக உங்கள் நாளாந்த செப வேளையில் மன்றாடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதி.வந் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை
ஆயர்
திருகோணமலை, மறைமாவட்டம்
திருபோணமலை

## CATECHISM

C - கவனமாய்ப்படி
A - எதையும் துணிவோடு செய்
T - திறமையை வளர்
E - எறும்பிடம் கற்றுக் கொள்
C - கருணையாய் இரு
T - ஜாலியாய் வாழ்
I - ஐயத்தைப் போக்கு
S - சுறுசுறுப்பாய் இரு
M - மந்தமாய் இராதே

## மறைக்கல்வி


ம ~ மறை அறிவை வளர்
றை ~ றைட்டா நட
க் ~ க்குன்று சீசீ
க ~ கஞ்சமாயிராதே
ல் ~ இல்லையென்று சொல்லாதே
வி ~ விகடமாய்ப் பேசு

## கடவுளுக்காக நீ

தவம் → செபம் → பலி → தூபம்
தீபம் → யாத்திரை → ஆராதனை
பக்தி → சிலுவைப்பாதை → சிலை நடுவல்
திருவிழா

என வாழ்கின்றோமா? அல்லது உண்மை, நீதி, நேர்மை, மனித நேயம், தியாகம், தூய்மை, சகோதரத்துவம் என வாழ்கின்றோமா?

## பைபிள் வாசித்தால் புண்ணியமாம் யார் சொன்னது?



இன்று பலர் இப்படி வாசிப்பதில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு வாசிப்பு கூட தேவையில்லை வீட்டில் இருந்தாலே புண்ணியமாம் ~ எனவே வாங்கி வைத்திருக்காங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்பணியாளர்

அருட்பணி N.C அருள்வரதன்

➤ பட்ட துயர்
படுதுயர்கள்
நட்டநெடுமரமெனவே
நன்குயர்ந்து போயின்று
எட்டவும் முடியாத
ஏக்கங்கள் பெருகியே
எரிமலையாய் மனங்களும்
உருகுவதைக் காணுகின்றோமே

➤ மக்களின்
துயர் துடைக்கும் பணிகள்
நிறைந்தவைகள்
பரந்தெங்கும் இருக்கவே
நடைமுறையில்
துயர் துடைக்கும் கருமங்கள்
நலிவடைந்து போவதையே
காணுகின்றோம்

➤ வறுமை வெறுமை
அவலங்கள் இன்னும் பல
இதனால்
பொறுமை இன்றியே மக்கள்
போர்க்கோலம் பூண்டுவிட்டால்
பின்
அமைதியை எவராலும்
காணவே முடியாது

➤ பிழைகள் நீக்கியே
துயர்கள் மாற்றியே
நிறை இன்பம் காணவே
உயர் பணியாய்
இதை ஏற்றுக் கொள்பவர்கள்
உண்மையில் நற்பணியின்
பங்காளரே.

## ஒரு கிறிஸ்தவ நல்லாசிரியர்

ஒரு கிறிஸ்தவ ஆசிரியர் என்பவர் தன்னுடைய பங்குக் குருவுக்கு இன்னும் இரு கண்களாகவும், இன்னும் இரு காதுகளாகவும், இன்னும் தூரமாய் எட்டிப்பிடிக்க இன்னும் இரு கைகளாகவும் அவரை மேலும் தொலைவுக்கு அழைத்துச் செல்லும் இன்னும் இரு கால்களாகவும், சிறப்பாக எல்லா இனத்தவர்க்கும் நற்செய்தி அறிவிக்க அனுப்பப்பட்ட குருவுக்கு இன்னும் ஒரு நாவாகவும் இருக்கிறார்.

- Fr. தோமஸ் கவான் ட.்.பி -

## மறையாசிரியர் ~ catechist

அருட்பணி எஸ். ஆர். ஜெயரத்திணம்

C – Christ ~ கிறிஸ்துவை அறிவிப்பவர்
A – Angelic ~ தூய்மையானவர்
T – Teacher ~ நல்லாசிரியர் ~ கற்பிப்பவர்
E – Exemplary ~ உதாரணமாக வாழ்ந்து காட்டுபவர்
C–Co – cordinator ~ இணைப்பாளர் (கடவுள் ~ மாணவர்)
H – Hero/Heroine ~ தலைவன் / தலைவி வழிகாட்டுபவர்
I – Inspirational ~ (நல்லவற்றைத்) தூண்டுகின்றவர்
S – Simple ~ எளிமையானவர்
T – Time ~ காலத்தைப் பற்றிய உணர்வுள்ளவர்

**வாசகர்களே!**

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

## மறைமாவட்டப் பாதுகாவலர் தூய லொயலா இஞ்ஞாசியார். இயே.ச.

அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா. இயே.ச.

**மொன்சராத் மலைஉச்சியை (முகட்டை) நோக்கி**



படுக்கையில் முடங்கிக் கிடந்த பத்து மாதங்கள் பறந்தோடிக் கொண்டிருந்தன. தான் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வேட்கை, பேரவா. இறுதியாக தீர்மான முடிவொன்றுக்கு வந்தார். தனது குடும்பம், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சிறுபராயத்தில் இருந்து வாழ்ந்து வளர்ந்த லொயலா மாளிகை போன்றவற்றிற்கு பிரியாவிடை கொடுத்தார். அவர் எடுத்த முடிவிற்கு இலகுவாக ஆதரவு கிடைக்கவில்லை.

அவரது அன்பு உள்ளங்கள் பல்வேறு வழிகளில் அவர் மனதை திசைதிருப்பப் பார்த்தனர். ஆனால் இனிகோவோ தனது முடிவில் திடமாக இருந்தார். வேறுவழியின்றி லொயலா வாசல் வரை சென்று அவரை கண்ணீர் மல்க அவரது சகோதரர்கள் வழியனுப்பி வைத்தனர்.

லொயலா மாளிகையில் இருந்து ஏறக்குறைய 600கி.மீ தூரத்தில் உள்ள மொன்சராத் மலையை நோக்கி கோவேறு கழுதை ஒன்றில் தனது பயணத்தை ஆரம்பித்த இனிகோ வழியில் உள்ள அரன்சசு (Our Lady of Arransasuzu) என்னும் அன்னை மரியாளுக்கென அமைத்துள்ள ஆலயத்தில் சிலமணி நேரம் செபத்தில் செலவிட்டார். மீண்டும் பயணத்தை ஆரம்பித்த இனிகோ வழியிலே சந்தித்த ஒரு பிச்சைக்காரனிடம் தனது பகட்டான பட்டாடைகளைக் கொடுத்துவிட்டு அவன் அணிந்திருந்த ஆடைகளை அணிந்து கொண்டார்.

தனக்கென சாக்குத் துணியிலான தொங்கல் ஆடையைத் தைத்து அதனை அணிந்து கொண்டார். அரைக் கச்சையாக பெரியதொரு கயிறையும் ஒரு குடுவையையும் பயணியின் கோலையும் கயிறால் செய்யப்பட்ட காலணிகளையும் விலைக்கு வாங்கினார். இடது காலிற்கான காலணியைத் தூக்கி எறிந்து விட்டு வலது காலில் மட்டும் காலணியை அணிந்து கொண்டு பயணத்தைத் தொடங்கினார்.

பலநாட்கள் பிரயாணத்தின் பின் மொன்சராத் மலையடிவாரத்தை அடைந்தார். இது ஓர் இயற்கை எழில் ஒருங்கிணையப் பெற்ற அழகிய உயர்ந்த மலையாகும். மலை முகட்டிலே தான் கருவண்ணக் கன்னிகை (Black Madona) என்ற அன்னை மரியாளுக்கென நேர்ந்து கொண்ட அழகிய பிரம்மாண்டமான திருத்தலம் அமைந்துள்ளது. இன்றும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தினமும் இவ் அன்னையின் ஆலயத்தைத் தரிசிப்பது ஓர் சிறப்பம்சமாகும். மொன்சராத் மலையிலே வனத் துறவியரின் ஆசிர்வாதப்பர் (Hermitage of Benedictine Monastery) மடம் இருந்தது. இன்றும் கருவண்ணக் கன்னிகையின் ஆலயப் பொறுப்பினை இவர்களே பரிபாலித்து வருகின்றனர். இம்மடத்தின் பொறுப்பாளராக இருந்த ஜோன் சான்நோன் (John Shannon) என்னும் மடாதிபதியிடம் பொதுப் பாவசங்கீர்தனம் செய்து அதற்கான பாவமன்னிப்பினையும் பெற்றார். இனிகோ தனது பாவங்களை எழுத மூன்று நாட்கள் சென்றன என அவரே தனது கைபட எழுதியுள்ளார்.

மரியன்னைக்கு மங்கள வார்த்தை அறிவித்த நாளான பங்குனித் திங்கள் 25ம் நாளுக்கு முந்திய நாளான இரவில் (24ம் திகதி 1522) கருவண்ணக் கன்னிகையின் சுருவத்தின் முன் ஒற்றைக் காலிலே நின்று தனது வீரவாளினைக் கையில் ஏந்திக்கொண்டு இரவு முழுவதும் கண்விழித்து செபம் செய்தார். தனது வாளையும் கத்தியையும் அன்னை மரியாளின் பாதத்தில் தொங்கவிட்டு முற்றும் முழுவதுமாக இயேசுவின் பாதத்தில் அர்ப்பணமாக்கினார்.

கருவண்ணக் கன்னிகை ஆலயத்திலே வாழ்நாள் எல்லாம் செலவிட வேண்டும் என்னும் வேட்கை, பேரவாய் இனிகோ மனதிலே தோன்றினாலும் இறைசித்தமோ வேறாக இருந்தது. அவர் நீண்டநாட்கள் அங்கு தங்குவதை மடாதிபதிகள் விரும்பவில்லை. இவர் உண்மையிலே இறை பக்தனா? அல்லது வழிப்போக்கர் வடிவிலே வேவுபார்க்க வந்த உளவாளியா? என்ற சந்தேகம் அவர்கள் உள்ளத்திலே உதித்திருக்க வேண்டும். அவரை அதிக நாட்கள் மடத்திலே வைத்திருந்தால் ஆபத்தாகும் என அவர்கள் நினைத்திருக்க வேண்டும். எனவே அவர் அவ்விடத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என வற்புறுத்தினார்கள். வேறுவழியின்றி அவ்விடத்தை விட்டு வெளியேற முடிவு செய்தார்.

கருவண்ணக் கன்னிகையின் ஆலயத்திலே காலைத் திருப்பலியில் பங்கேற்ற பின் மலையில் இருந்துகீழ் இறங்கினார். புனித பூமியாம் ஜெருசலேம் நகரை நோக்கிப் பயணம் செய்வதே அவரது எண்ணமாக இருந்தது. கால்நடையாக தனது பயணத்தைத் தொடங்கினார். பம்பலோனா நகரிலே போரினால் காயமடைந்த அவரது கால்கள் நீண்டதூரம் நடக்க மறுத்தன. மொன்சராத் மலையில் இருந்து ஏறக்குறைய 23கி.மீ தொலைவில் உள்ள மன்ரேசா நகரூடாக நடக்க நேரிட்டது.

தொடரும்..............

## குட்டிக் கதை

Fr.NC

ஒரு தொழிலதிபர் தன்னுடைய நிலையத்திற்கு ஒரு பொறுப்பு வாய்ந்தவரைத் தேடிக் கொண்டிருந்தார். ஒரு இளைஞனைக் காண்கிறார். எடுப்பான தோற்றம் பார்வைக்கு நன்றாக இருந்தான் .

தொழிலதிபர் அந்த இளைஞனைப் பார்த்து **உனது நெருங்கிய நண்பன் யாரென்று** கேட்டார். அதற்கு அவன் ஒரு பெயரைச் சொன்னான்.

பின் அவர். அந்த இளைஞரிடம் இன்னுமொரு நண்பன் யாரென்று கேட்டார் அவனும் சொன்னான் தொழிலதிபர் **"இன்னுமொருவரைச் சொல்லும் பார்ப்போம்"** என்றார். அவனும் சொன்னான்.

இளைஞன் சொன்ன மூன்று பேரையும் தொழிலதிபருக்கு நன்றாக தெரியும் ஆனால் மூன்றுபேருமே மிகவும் மோசமானவர்கள் இப்போது தொழிலதிபருக்கு இந்த இளைஞன் யாரென்று விளங்கிவிட்டது. ஒரு பொறுப்பைக் கொடுக்க நினைத்தவர் இப்போது தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

நீ யாரென்று சொல்லாதே உனது நண்பன் யாரென்று சொல் நீ யாரென்பதை அறியலாம் என்பதில் எத்தனை உண்மைகள் உள்ளன... உண்மைதானே

## மறை பணி

### கவிதைப் போட்டி

Fr.NC

☐ இதோ கவிதை வரிகள்
☐ சரியாக நிரைபடுத்துங்கள்

➤ மறையறிவைப் பெறுவோரும்
➤ குறையின்றித் துணைபுரிய
➤ இறையாசீர் அவர்களையே
➤ இறைபணியாய் ஏற்றெங்கும்
➤ நிறைந்தென்றும் தொடர்வதோடு
➤ மறையறிவுப் பணி வாழ்வை
➤ மன நிறைவு கண்டிடவே
➤ பணியாளர் முன்வரவே
➤ மனம் நிறைந்த மனிதனையே
➤ மகிழ்வுடனே கொடுப்போமே

☆ இலக்கங்களினால் நிரைபடுத்தக் கூடாது
☆ எழுத்து மூலமே நிரை படுத்துங்கள்
☆ அதிகமானோர் சரியாக நிரைபடுத்தினால்
☆ குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் பரிசு 400/=
2ம் பரிசு 300/=
3ம் பரிசு 200/=

### உதவும் கரங்கள் கவிதை வரிகளின் சரியான வடிவமைப்பு

Fr.NC

வாடி வந்த முகமதனின்
வாட்டமதை இனங்கண்டு
நாடியதை அன்புடனே
நல்லுணர்வு கொண்டவராய்
கூடியதன் குறைகள் நீக்கி
வாடிய நிலைகளை மாற்றி முகம்
வனப்படையச் செய்வதனால்
கூடியே வளரும் நன்மைகளால்
கொண்டாடுமே அதை மனங்களுமே

பங்குப்பறியவர்கள் 38பேர்
சரியாக வடிவமைத்தவர்கள் 08 பேர்
குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள்

1ம் பரிசு 400/=
சு. தாத்தேயூ சீலி
இல 53/5 5ம் ஒழுங்கை
இலிங்கநகர், திருகோணமலை

2ம் பரிசு 300/=
பீ. ஹயிசிந்
இல 53/3 5ம் ஒழுங்கை
இலிங்கநகர்
திருகோணமலை

3ம் பரிசு 200/=
எஸ் செல்டன்
இல 53/5 5ம் ஒழுங்கை
இலிங்கநகர்

பாராட்டுக்குரியவர்கள்

எஸ். கிரிசாந்தினி
இலிங்கநகர்
செ. பீலிக்ஸ் செல்வராஜா
இலிங்கநகர்
எஸ். தினிஸ் ஜோய்
இலிங்கநகர்
எப். ஆன் பிரசில்டா
இலிங்கநகர்
ரி. மெரின்டன்
இலிங்கநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வியும் சிறுவர்களும்



மனித வாழ்வு என்பது கருவறை தொடங்கி கல்லறை வரை பல மேடு பள்ளங்கள் ஏற்றதாழ்வுகள் என பல பரிமானங்களை கடந்து அநேகமானவற்றை கற்றுக் கொண்டு சில சந்தர்ப்பங்களை அனுபவங்களாக்கி அதன் வழியாக முதிர்ச்சியடைந்து அதன் எச்சங்களை தடையங்களாக சமூகத்திற்கு விட்டுச் செல்லும் ஒரு மாதிரிகை எனலாம்.

ஒரு குழந்தை கருவறையில் உதயமானவுடன் தன் மறை வழியை தாயின் எண்ணங்கள் உணர்வுகள் மூலம் கற்று வளர்ச்சியடைகிறது. இவ்வுலகில் பிறந்து வாழும் போது அதன் மறை ஆசான்கள் எனப்படுவோர் அதன் பெற்றோரே ஆவர். குடும்பம், உறவு, சுற்றம், சூழல் என பலவற்றை கடந்து வளரும் பிள்ளைக்கு சந்திக்கும் ஒவ்வொரு நபரும் நேர்ச் சிந்தனையுடன் மறையை தரக்கூடியவரான நல்ல அனுபவத்தைப் பிள்ளை பெற வேண்டும். உதாரணமாக ஆன்மீக செயற்பாடுகளான குடும்பச் செபம், குழுவாழ்வு, பகிர்வு போன்றவற்றை கூறலாம்.

கால ஓட்டத்தில் பிள்ளையை வரவேற்கும் திருச்சபை சமூகத்தின் அருட்பணியாளர்கள் முதல் அனைத்து நபர்களும் அதன் ஞான வாழ்வுக்கு பொறுப்புடையவர்கள். வெறும் வியாபார நோக்குடன் வழங்கப்படுகின்ற கல்வி நவீன தொடர்பாடல் யுகம், நுகர்வோர் கலாச்சாரம் உலக மயமாகும் சிந்தனைகள் போன்றவை சிறுவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு பெரும் சவாலாக மாறி அச்சுறுத்துகின்றன.

உள்ளங்கை தொடர்பாடலில் மூழ்கி சிறுவர்கள் வீணாக பொழுது போக்கி அறிவை மழுங்கடிக்கும் சூழ்நிலை வேகமாகிவிட்டது (கையடக்கத் தொலைபேசி) சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வதைகள், படுகொலை என அளிவுக்குட்பட்ட அப்பாவி சிறார்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது. சுகாதாரம், உடல் உள நலம் போன்றவையும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் இக் காலகட்டத்தில் சிறுவர்களுக்கு நாம் வழங்கும் மறைக்கல்வி தொடர்பாக நமது நிலைபாட்டை ஆராயவும் அதன் களைகளை பிடுங்கி பண்படுத்தவும் வேண்டிய தேவை நமக்குள்ளது மறைக்கல்வி சமூகமாக ஒன்றிணைந்து பொது நோக்குடன் நாம் சேவையையும் பிள்ளைகளின் தேவையையும் இனங்காண வேண்டிய அவசரமும் உள்ளது. இன்றைய நமது மறைக்கல்வி சிறுவர்கள் மட்டில் பின்வருமாறு செயற்படவும் வாய்ப்புகள் உள்ளது.

01. மறைக்கல்வியை விட அறிவை மட்டும் வளர்க்கும் கல்வி, பிறமொழி கல்வி என பெற்றோர் முக்கியத்துவப்படும் நிலை அதிகரித்துள்ளது.

02. பிள்ளைகளை சிந்திக்க விடாது, செயற்பட விடாது துண்டிக்கும் / முடக்கும் சமூகப் போக்கும் மிதமிஞ்சியுள்ளது.

03. மறையறிவும் பரீட்சையை மட்டும் மையப்படுத்தியும், போட்டிகளை குறிவைத்தும் கற்பிப்பதோடு நின்று விடுவதாகவும் அமைந்துள்ளது.

04. வெறும் புத்தகப்படிப்போடு மட்டும் நின்றுவிடும் மறைக்கல்வியாக உள்ளது.

எனவே குறிப்பறிந்து சிந்திக்கவும் செயல் ஊக்கம் பெறவும் மாற்றமும் சிந்தனையும் நம் சமூகங்களில் தொடரும் காலங்களில் பின்வரும் விதமாக சிந்திக்கவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

01. பெற்றோருக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள்

02. சிறார்களை நல்வழிப்படுத்தும் **"மனிதமைய மறைக்கல்வி முறை"** கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

03. சிறார்களின் தலைமைத்துவம் பண்புகளை நெறிபடுத்தி வழிநடத்த பாசறைகள், தியானங்கள், ஞான ஒடுக்கங்கள்

04. சிறுவர் பாதுகாப்பு உடல்நலம், உளநலம் தொடர்பான விழிப்புணர்வு (பெற்றோர், சிறுவர்கள், மறையாசான்கள்)

05. செயற்பாட்டுடன் கூடிய அனுபவ மறைக்கல்விக்கு வழிகாட்டல் வழிபாடுகள் ஊடாக களப்பயணம் கலாச்சார நிகழ்வுகள்

06. சுயமாக சிறுவர்களை வளர்க்கும் நூலாக சஞ்சிகையாக்கம் விளையாட்டு நவீன தொடர்பாடல் அரங்கம் போன்ற வித்தியாசமான செயற்பாடுகளை திட்டமிடல்

நமது சிந்தனைகளை மாற்றுவதால் செயற்படும் ஊக்கம் அதிகரிக்கும் செயற்பாட்டால் முழு அனுபவம் கிடைக்கும். சிறந்த அனுபவம் வாழ்வை வளப்படுத்தும் எனவே வளப்படுத்தும் மறையறிவை முழு அனுபவமாகக அனைவரும் ஒன்றினைய இறையருள் நம் எல்லோரிலும் நிறைவதாக.

**திருமதி ரீட்டா பெர்னாண்டோ**
**பாலையூற்று**

# சாட்சிய வாழ்வு நல்ல ஆலோசனை மாதாவே

சென்ற மாதம் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட மாதம் என்றே கூறலாம்.ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இல்லத்திலும் மாதாவின் செபமாலைத்தியானத்தை தியானிப்பதுடன் பல்வேறுபட்ட தேவைக்காகவும் மாதாவின் பரிந்துரை வழியாக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும்.நமக்கு அளிக்கப்பட்ட பரிசுத்த மாதம் என்றே கூறலாம்.

தினமும் மாதாவிற்கு செபமாலையின் பின்பு பிரார்த்தனையில் நல்ல ஆலோசனை மாதாவே என்று சொல்லும் போது என் வாழ்விலும் நாம் பெற்ற இறை அனுபவத்தை பகிர ஆசைப்படுகிறேன்.

25 வருடங்களுக்கு முன்பு என் மூத்த மகளுக்கு எழு வயது இருக்கும். அவளுக்கு ஒவ்வொரு மாதமும் காய்ச்சல் வரும் மருந்து எடுப்பேன் சுகமாகி விடும் மீண்டும் என்னெடா! ஒவ்வொரு மாதமும் பிள்ளை காய்ச்சல் வருகின்றதே என்று பெரிய வைத்தியசாலையில் தங்க வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தி மருந்துகள் கொடுக்கப்பட்டது. சுகம் பெற்று வைத்தியசாலையை விட்டு வரும் போது டாக்டர் கூறினார் "இனிமேல் காய்ச்சல் வந்தால் கொழும்பு வைத்தியசாலைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும் என்று அதன் பிறகு வீடு வந்ததும் 3 நாட்களுக்கு பின்பாக மாலை நேரம் இருக்கும். பிள்ளைக்கு பலமாக காய்ச்சல் அடிக்கிறது எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை காய்ச்சல் வந்தால் கொழும்புக்கு கொண்டு செல்ல வேண்டும். நாட்டுப்பிரச்சினை காலகட்டம் போக்குவரத்தை நினைத்தால் மிகப் பயங்கரம் கலங்கிப்போகின்றோம்.

நானும் எனது கணவரும் எனக்கென்றால் அழுகை அழுகையாக வருகின்றது என் பிள்ளையை கால்களில் படுக்க வைக்கின்றேன். செபமாலை கையில் எடுக்கின்றேன். பிள்ளையை கால்களில் ஆட்டி ஆட்டி செபமாலையும் பிரார்த்தனையும் சொல்லத் தொடங்குகின்றேன் மீண்டும் மீண்டும் தாயாரிடம் அழுது அழுது சொல்கின்றேன் விடியும் போது அப்படி கண்ணயர்ந்து விட்டேன் அப்போது கனவில் ஒரு முக்காடு இட்ட பெண்மணி (மாதா) "கவலைப்படாதே பிள்ளைக்கு காய்ச்சல் இல்லை சின்ன முத்து போட்டிருக்கு என்று கூறி மறைந்து விட்டார்" திடுக்கிட்டு எழும்பினேன். பிள்ளையை வெளிச்சத்தில் பார்க்கிறேன் ஒன்றும் தெரியவில்லை பக்கத்து வீட்டு அனுபவமான அன்ரி ஒருவரை கூப்பிட்டு விசயத்தைச் சொல்லி பார்க்க வைக்கின்றேன். அவள் நன்கு உன்னிப்பாக பிள்ளையின் உடலைப் பார்த்து விட்டு ஓம் பிள்ளைக்கு சின்னமுத்துவின் ஆரம்பமாக சிறிய சிறிய பருக்கள் போட்டிருப்பதாகவும் அதனால் காய்ச்சல் அடிக்கிறது என்றும் கூறினார்.

எனக்கென்றால் மகிழ்ச்சி ஒருபுறம் ஆச்சரியம் ஒரு புறம் மாதாவின் அற்புதமான செயலை நினைக்கின்றேன் என்னையும் பிள்ளையையும் அலைக்கழிக்க விடாமல் ஒரு நல்ல ஆலோசனை கூறி எங்களைக் காப்பாற்றி விட்டீர் பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட இறைவனின் தாயல்லவா அவரின் பரிந்துரைக்காக நம்பி வேண்டும் போது நிச்சயம் பலன் கிடைக்கும் இதனாலன்றோ விசுவாசத்தின் பெரிய ஆயுதம் செபமாலை என்று கூறுகிறார்கள் எனது வாழ்விலும் செபமாலைத் தியானத்தை தியானிக்கும் போது மாதா செய்த அற்புதம்தான் வந்து வந்து போகும் இதையிட்டு மாதாவின் பரிந்துரை எங்கள் அனைவருக்கும் தேவை அனைவருக்கும் அனுபவம் தான் நல்ல சாட்சியம்.

திருமதி. ச. சிறில் பத்திநாதன்
உவர்மலை

<u>மறைக்கல்வி என்பது கிறிஸ்து</u>

மறைக்கல்வி வாழ்வின் வளர்ச்சி கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி ஆகவேதான்

மறைக்கல்வியின் அடித்தளம் - <u>மீட்பின் வரலாறு</u>
மறைக்கல்வியின் மையம் - <u>இயேசு கிறிஸ்து</u>
மறைக்கல்வியின் பொருள் - <u>இயேசுவின் நற்செய்தி</u>

எனவேதான் இன்றும் என்றும் அது மறைக்கல்வியாகும்.

<u>**மறைக்கல்வி**</u>

நம்மை விசுவாச வாழ்வுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்

திருமுழுக்கின் போது ஊன்றப்பட்ட விசுவாசம் என்னும் விதை முளையிட்டு தழைத்து முழு வளர்ச்சி அடைய வேண்டும்

கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே மறைக்கல்வியாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

☛ 1ம் பக்கத் தொடர்ச்சி

# புதிய ஆயரை......

அருட்தந்தையின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிங்களப் பிரிவு சார்பாக செல்வி. அஞ்சலா அவர்கள் புதிய ஆயரை வரவேற்றதோடு நாம் அனைவருக்கும் ஒற்றுமையாக ஆயருக்குக் கீழ்ப்படிந்து பணியாற்றுவதோடு எமது ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பொதுநிலையினர் ஆணைக் குழுவின் செயலாளர் திருமதி சுரேந்தினி மணிவண்ணன் அவர்கள் எமது புதிய ஆயரைக் கவிபாடி வாழ்த்தியதோடு ஆயரின் திருநிலைப்படுத்தல் நிகழ்வானது அனைவரும் வியக்கத்தக்க விதத்தில் மிகவும் பிரம்மாண்டமாகவும் சிறப்பாகவும் அமைந்தது. அதற்கு காரணம் ஆவியானவரின் செயற்பாடே எனவும் நாம் அனைவரும் எமது ஆயருக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு அவருக்காக நாம் அனைவரும் ஜெபிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து எமது மறைமாநில புதிய ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் அவர்களின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெற்றது. அவற்றில்

01. தமது ஆயத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு சிறப்புற அமைய பணியாற்றிய எமது குருமுதல்வர் மற்றும் அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், பொதுநிலையினர் அனைவருக்கும் தமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்
02. அத்தோடு, ஆன்மீகம், கல்வி, சமூகப்பணி என்ற மூன்று கருத்துக்களையும் முன்வைத்ததோடு இவ்வெண்ணக் கருக்களைக் கொண்டு இம் மறைமாவட்டத்தில் பணியாற்ற இருப்பதாகவும் இதற்கு அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனவும்,
03. எமக்கு வரும் தடைகளைக் கண்டு துவண்டு போகாமல் அவற்றில் இருந்து எமது வாழ்விற்குத் தேவையான நல்ல விடயங்களைப் பெற்றுக் கொண்டு வெற்றிப் பாதையை நோக்கி நடை போட வேண்டும் எனவும் எமது மறை மாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் பெருக அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் திறந்த மனதோடும் அர்ப்பணிப்போடும் வருகின்ற நாட்களை எதிர்கொள்வோம். எனக்கூறி தமது உரையை நிறைவு செய்தார்

ஈற்றில் வருகை தந்திருந்த அனைவருக்கும் தமது கரங்களினாலேயே தமது நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார் அத்தோடு அன்றைய நிகழ்வானது இனிதே நிறைவெய்தியது.

**செயலாளர்**
**பொதுநிலையினர் ஆணைக்குழு**

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

**கடவுளே நீரே என் இறைவன் உம்மையே நான் நாடுகின்றேன் என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 2000 | | 2014 |
| 03 |  | 09 |
| 18 | | 08 |

**அமரர். செல்வன் விஜயகுமார் மனோஜ்**

உன்னை எண்ணி எத்தனையோ
கனவுகள் கண்டோம் நாம்
விரைவிலே எம்மை விட்டுச் செல்வாயென்று
கனவிலும் நாங்கள் நினைக்கவில்லை
மகனே உனது உயிர் தான்
எம்மை விட்டு பிரிந்துள்ளது
உன் நினைவுகள் என்றும் எம்மை
விட்டு ஒருபோதும் அழியாது

**உனது ஆத்மா இறைவனில் சங்கமமாகட்டும்**

**ஞானப்பெற்றோர் (திருமதி மேபிள் அன்டனிசேவியர்)**

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் உருவாக்கமும் குடும்ப ஒன்றுகூடலும்

திருகோணமலை மறைமாவட்டத்தின் கிறிஸ்தவ வாழ்வு சமூகமானது யூலை 12ம் திகதி உருவாக்கப்பட்டுள்ளது கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினை பலப்படுத்தவும் அதனை வழிநடத்தவுமென அதி மேதகு ஆயரால் இப்பணிக்கு நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி அனிஸ்ரன் மொராயஸ் இ.ச அடிகளாரின் அயராத முயற்சியின் கீழ் பேராலயப்பங்கு, குவாடாலூப்பே பங்கு செல்வநாயகபுரப் பங்கு, இறையிரக்கத் திருத்தலப் பங்கு ஆகியவற்றில் செயல்படும் கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தைச் சேர்ந்த 38 பேரை உள்ளடக்கிய மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகம் தோற்றம் பெற்றுள்ளது. இயேசுசபை முன் சன்னியாச இல்லத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் உலகளாவிய கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் (Logo) வினை மையப்படுத்தி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்திற்கான புதிய இலட்சினை (Logo) அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதுடன் கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களின் வகிபாகம் மற்றும் தூய இஞ்ஞாசியாரின் பணிகள் தொடர்பாக அருட்பணி ஜே. அனிஸ்ரன் மொராயஸ் இ.ச அடிகளாரால் விளக்கமளிக்கப்பட்டது. இதில் பின்வருவோர் மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின்

நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு LGC லீனஸ், உப தலைவர்: திருமதி. B. சாந்தி,
செயலாளர்: திரு P. ராஜ்குமார், உப செயலாளர்: திருமதி S. அனித்தா
பொருளாளர்: திரு. ம. அருள்பிரகாசம்

**செயற்குழு உறுப்பினர்கள்**

திருமதி நிசாந்தினி கிளமன்ற், திரு. F. அன்ரனி, திரு. S. அன்ரனிதாஸ், திருமதி மேரி மற்லீன் திரு K. விமல்ராஜ், செல்வி M. குயினி, செல்வி U. றெஸ்லின் ஆலோசகராக திரு மரியநேசம் அவர்கள் செயற்பட உள்ளார்.

மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் 01வது செயற்பாடான குடும்ப ஒன்றுகூடலானது 02. 08.2015ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 06 மணியளவில் இயேசுசபை முன் சன்னியாச இல்லத்தில் நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகியதுடன் சிறுவர்கள் பெரியோருக்கான களிப்பூட்டும் விளையாட்டு நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. இறுதியில் இராவுணவுடன் இந் நிகழ்வு நிறைவு பெற்றது.

ச. அன்ரனிதாஸ்
கிறிஸ்தவ வாழ்வு சமூகம், திருகோணமலை மறைமாவட்டம்

## பாலையூற்றுப்பங்கின் முதியோர் சங்கத்தினரின் திருவிழா

பாலையூற்றுப்பங்கின் முதியோர் சங்கத்தினர் தங்கள் பாதுகாவலராம் தூயவர்களான சுவக்கீன் அன்னமாள் திருவிழாவை யூலை மாதம் 26ம் திகதி ஞாயிறு திருப்பலியில் சிறப்பித்துக் கொண்டாடினர். அன்றைய தினம் காலை 6.00 மணித் திருப்பலி விசேட திருப்பலியாக முதியோர் சங்க உறுப்பினர்களால் சிறப்பிக்கப்பட்டது தொடர்ந்து "அனா" மண்டபத்தில் சிறிய ஒன்று கூடலும் சிற்றுண்டிப் பகிர்வும் ஒழுங்குபடுத்தப்பட்டு நிகழ்வு இனிதே சிறப்பிக்கப்பட்டது.

## குவாடலூபே திருத்தல பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் 2015 ஆண்டின் முதல் 06 மாதகால முன்னேற்ற செயற்பாடுகள்

குவாடலூபே அன்னை திருத்தலத்தில் பிறிமறரியா கிறிஸ்தவ வாழ்வு சமூகமானது 13 உறுப்பினர்களுடன் அருட்பணி ஜே. அனிஸ்ரன் மொறாயஸ் இ.ச அடிகளாரின் ஆலோசனையுடனும் பங்குத்தந்தை அருட்பணி எஸ். சுகுணேந்திரன் அடிகளாரின் வழிகாட்டலுடனும் பல ஆன்மீக பணிகளை செயற்படுத்தி வருகின்றது.இதன் அடிப்படையில் 2015 ம் ஆண்டின் முதல் 06 மாத காலத்தில் பல பணிகளை முன்னெடுத்து அங்கத்தவர்களின் ஆன்மீக வாழ்க்கையினை பலப்படுத்தியதுடன் மறைக்கல்வி மாணவர்களையும் வழிப்படுத்தியுள்ளது. அவ்வகையில் அதன் செயற்பாடுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

ஜனவரி , பெப்ரவரி மாதங்களில் இயேசு சபை இல்லத்தில் அருட்பணி ஜே. அனிஸ்ரன் மொறாயஸ் இ.ச அடிகளாரின் தலைமையில் நற்சிந்தனை பகிர்வு இடம் பெற்றுள்ளது.

17.01.2015ல் கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களின் ஒன்றுகூடலும், முன்னாள் பங்குத்தந்தையுமான அருட்பணி ஜோன்பிள்ளை அவர்களுக்கான பிரியாவிடை வைபவமும், தற்போதய குவாடலூபே அன்னை திருத்தல பங்குத்தந்தை அருட்பணி எஸ். சுகுணேந்திரன் குருஸ் அடிகளாருக்கான வரவேற்பு நிகழ்வுமாக இராவுணவு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மார்ச் மாதம் 07ம் திகதி கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களுக்கான ஆன்மீக கருத்தரங்கு நிலாவெளி தூய சூசையப்பர் ஆலயத்தில் அருட்பணி ஜெயபாலன் அ.ம.தி அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. அதில் பாவமன்னிப்பு, மனமாற்றம் போன்ற விடயங்கள் பகிரப்பட்டன.

மார்ச் மாதம் 14ம் திகதி தவக்காலத்தை முன்னிட்டு குவாடலூபே அன்னை திருத்தல பங்கிலுள்ள மறைக்கல்வி மாணவர்கட்கும் அவர்களது பெற்றோர்களுக்குமான தவக்கால கருத்தரங்கு பேராலய பங்கு உதவி பங்குத்தந்தை அருட்பணி செபஸ்டியன் றெவல் அ.ம.தி அடிகளாரின் தலைமையில் குவாடலூபே அன்னை திருத்தலத்தில் நெறிப்படுத்தப்பட்டது.
ஒவ்வொரு மாதமும் முதலாவது சனிக்கிழமை மாலை திருப்பலியின் பின்னர் நற்கருணை ஆராதனையை பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்கள் மேற்கொள்கின்றனர்.

கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினரின் இல்ல வழிபாடு மாதம் ஒருமுறை ஒரு அங்கத்தவரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. இதில் சகல கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களும் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ச.அன்ரனிதாஸ்
பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூகம்
குவாடலூபே திருத்தலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதி மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகைக்கு நன்றியுடன் சில நினைவுகள்....



கரம்பொன் கருணையுடன் உவந்தளித்த
கருத்துமிகு காப்பாளரான எம் ஆயரே
கரிசனையாய் உம் மந்தையினை நெறிப்படுத்தி
கலக்கமின்றி ஓய்வு பெற இறை சித்தமானதுவோ

வங்கக் கடல் சூழ் திருமலை மட்டுநகர் மறைமாநிலங்களை
வாஞ்சையுடன் பொறுப்பேற்று ஆண்டுகள் முப்பத்து மூன்று
வளம்பல வளரப் பணியாற்றி உம்மந்தைகளைப் பேணி
வழுவின்றி வழிநடத்த புதிய மேய்ப்பரிடம் பொறுப்பளித்தீரோ

பேரலையும் போரும் இயற்கையின் சீற்றமும் இடம் பெயர்வும்
பொருளோடு உயிரிழப்பும் பொருந்தா அகதி வாழ்வும்
பெருமளவு பாதித்த மக்களை இன மத வேறுபாடின்றி
பேரன்பாலணுகி உதவிக்கரம் நீட்டிய நல்லாயரே

இறைபணியோடு பொதுப்பணியிலும் சமமாய்ப் பங்கேற்று
இறையாட்சி ஊழியராம் குருக்கள் துறவியர் பொதுநிலையினர்
இளையோர் சிறுவரென இனங்கண்டு பணி பகிர்ந்து
இன்னா கடிந்து இனியவை பாராட்டி வழிநடத்திய மேய்ப்பரே

பின்னிலவாய்க் கடந்து விட்ட இறைபணிக்காலம்
பழுவின்றி குளிர் நிலவாய் அமைதி தரும்
பணி வாழ்வில் ஓய்வின்றி இயங்கிய தந்தையே
பரமனும்மை குறைவின்றி நிறைவாய்ப் பேணிட வேண்டுகின்றேன்

ஆயராய் நிறைவெய்தி ஆண்டுகள் பல கடந்து
அடுக்கான சவால்களை மிடுக்கோடு சாதனையாக்கி
அலுப்பின்றி சலிப்பின்றி அத்தனைக்கும் முகங் கொடுத்தவும்மை
அமைதியின் ஓய்வில் நூற்றாண்டு நலமே வாழ இறையாசீர் வேண்டுகின்றேன்.

திருமதி. நவமணி உலகராஜா
தம்பிலுவில் - 01

## எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரால் புதிய ஆயரை வரவேற்றல் நிகழ்வு

எமது திருகோணமலை மறைமாவட்டத்திற்கு கடந்த ஆடி மாதம் 25ம் திகதி புதிய ஆயராக திருநிலைபடுத்தப்பட்ட கிறிஸ்டியன் நோயல் இம்மனுவேல் ஆண்டகை அவர்கள் 2015ம் ஆண்டு ஆவணி மாதம் 26ம் திகதி புதன் கிழமை அவரது தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவரும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்.

பணிப்பாளர், பணியாளர்கள் அனைவரும் இன்முகத்துடன் ஆயரை அவர்களை வரவேற்று பொன்னாடை அணிவித்து கௌரவப்படுத்தினார்கள்.

பணிப்பாளர் தனது உரையில் ஆயர் அவர்களது சிறப்பு அம்சங்களையும் கற்றுக் கொண்ட பட்டப்படிப்புகளையும், இன, மத, மொழிபாராது மக்களுக்குச் செய்யும் சேவைகளையும் குறிப்பாக பின்தங்கிய கிராமங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி விடயத்தில் காட்டும் உதவிகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

அதனை தொடர்ந்து ஆயர் அவர்கள் உரையாற்றும் போது உதவி கோரிவரும் மக்களை இன் முகத்துடன் அன்பாகக் கதைத்து இயலுமான உதவிகளைப் புரிவது கிறிஸ்தவ விழுமியங்களை கடைப்பிடிப்பது அவதானிக்கப்பட வேண்டியவிடயம். அத்துடன் களத்திற்கு வேலை நிமித்தம் செல்லும் போதும் மிகவும் அவதானமாகச் செல்ல வேண்டும் எனவும் இந் நிறுவனத்திற்கு நற்பெயரை தேடிக் கொடுக்க வேண்டுமெனவும் பணிசெய்யும் பணியாளர்களை கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு பணியாளர்களும் தங்களை அறிமுகப்படுத்தியதுடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகள் பற்றி தெளிவுபடுத்தினார்கள் அத்துடன் பணியாளர்களின் நிறைகுறைகளை கேட்டறிந்து இறுதியில் அனைவருக்கும் ஆயரது ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.



**மறைக்கல்வியின் நோக்கம், :**
இன்னும் தொடக்க நிலையிலுள்ள விசுவாசத்தை இறைவனின் அருட் துணையால் வளர்ப்பதும், இள வயதினர், முதிர் வயதினரான விசுவாசிகளின் கிறிஸ்துவ வாழ்வுக்கு நாளுக்கு நாள் உணவூட்டி அதை நிறைவுக்கு கொண்டு செல்வதுமாகும். திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் **'இக்காலததில் மறைக்கல்வி அளித்தல்'**

# அன்றும் இன்றும் என்றும் அன்னை மரியாள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

## அவள் ஓர் கன்னிமரியாள்

யூத முறைப்படி அவர்கள் ஒவ்வொரு வருடமும் பாஸ்கா திருவிழாவுக்காக ஜெருசலேமிற்குச் செல்வார்கள். திருவிழா முடிந்து வரும் போது இயேசுவைக் காணாததால் சூசையும், மரியாளும் அவரைத் தேடிக் கொண்டு சென்றபோது அவர் அறிஞர்கள் மத்தியில் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் வியந்து போயினர் இயேசுவும், மரியாளும் தம் உறவினரின் திருமண வீட்டிற்குச் சென்றபோது அங்கு இரசம் தீர்ந்து விட்டது. செய்வதறியாது திருமண வீட்டார் நின்ற போது அவர்கள் நிலையை உணர்ந்த இயேசு தண்ணீரை இரசமாக்கி அவர்களின் இக்கட்டான சந்தர்ப்பத்தில் உதவினார்.

இயேசுவின் பாடுகளின் பாதையில் தாய் மரியாள் அவரோடு கூட பயணித்தார் என நாம் நற்செய்தி வாயிலாக அறிகிறோம் இங்கு அன்னை மரியாள் எல்லோருக்கும் தாயாக விளங்குவதைத் திருச்சபை எடுத்துக் கூறுகின்றது. அதுமட்டுமல்ல மரியாள் தனது 62வது வயதிலே சீயோன் மலையிலே மரணமடைந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் கெதரோன் பள்ளத்தாக்கு எனவும் தெரிகிறது. மரியா ஆன்ம உடலோடு விண்ணுலகிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் எனவும் கூறப்படுகிறது.

ஆதிமனிதன் ஆணவத்தால் இழந்த உறவை ஒப்புரவாக்க கடவுள் வாக்கு கொடுத்தார். **"உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம் அவள் உன் தலையை நசுக்குவாள்"** என்று இறைவன் வாக்களித்தார். தொடக்க நூலில் குறிப்பிடபபடும் பெண் யாரென முற் காலத்தில் தெள்ளத் தெளிவாக தெரியாவிடினும் பிற்காலத்தில் **"அருள் நிறைந்த மரியாள்" என உணர முடிகிறது.** நித்தியத்தில் இருந்து ஞானத்துக்கு இருப்பிடமாக வாழ்வுக்கு நம்பிக்கையாக இறைவனுக்குத் தாயாக தேர்ந்தெடுக்கப்பட்டர் அன்னை மரியாள். உலகத் தொடக்கத்திலேயே இறைவனால் மனுக்குலத்திற்கு மீட்பின் தாயாக வாக்களிக்கப்படுகிறார். ஒரு பெண்ணால் சாவு வந்தது போல் இன்னொரு பெண்ணால் வாழ்வு வர வேண்டும் என்பதற்காக கிறிஸ்து மனுவுருவாகுமுன்னே அவருடைய தாயாக நியமிக்கப்பட்டவரின் இசைவு பெற வேண்டும் என்று கருணை நிறைந்த தந்தை ஆவல் கொண்டார்.

பரிசுத்த ஆவியால் புதிய படைப்பாக உருவாக்கப் பெற்றவர் இந்த அன்னை மரியாள். தன் கீழ்படிதலால் தானும் மனுக்குலம் அனைத்தும் மீட்பு பெற காரணமானார். எனவே ஏவாளோடு கன்னி மரியை ஒப்பிட்டு "வாழ்வோரின் தாய்" என அன்போடு அழைக்கின்றோம். திருச்சபையின் தந்தையாரும் "ஏவையால் சாவு மரியாளால் வாழ்வு" என இயம்புகிறார்.

மரியாள் இயேசு ஏற்படுத்திய திருச்சபையின் ஒரு உன்னத உறுப்பினர். எனவே அவர் திருச்சபைக்கும் தாயாக இருக்கின்றார்.

நம் அன்னை கன்னி மரியாள் என்றும் நமக்கு ஆறுதலும் நம்பிக்கையுமாய் இருந்து அருள்மழை பொழிகிறார்.



புத்துயிர் அளிக்கும் அன்பு வாழ்வை எமக்கு அளிக்கிறார். துன்ப துயரத்திலும் ஏழ்மையிலும், தாழ்மையிலும், வறுமையிலும் ஏக்கத்திலும் கவலையிலும் உண்மையான மனவமைதி சமாதானம் போன்றவற்றுடன் வாழ வழிகாட்டுகிறார். விடிவெள்ளி போல் ஒளியைப் பரப்புகிறார். நமது உள்ளத்தில் ஊன்று கோலாகவும் ஒழுக்கத்தின் ஊற்றாகவும் புண்ணியத்தின் பூஞ்சோலையாகவும் இருக்கிறார். ஆகவே அன்பு அன்னையை நம்பிக்கையுடன் அண்டிச் செல்வோம். அவரின் தாயன்பைச் சுவைப்போம். அவர் வழியாக இயேசுவைப் பெறுவோம். இறை அருளைப் பெற்று மீட்பு அடைவோம்.

**JK. பிரசன்னா**
**புளியந்தீவு பங்கு**
**மட்டக்களப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 13
## திருத்தூதர் பணி அதிகாரம் 01 - 04

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 13. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**
**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30. 09. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ■ | சை | | | | | | ■ | அ |
| | செ | ■ | இ | நா | | ■ | | ம | |
| | | | | | | | | | |
| | | | | அ | | | | | பொ |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| கே | | | | | | | | | பெ |
| | | | | | கு | | | | |
| | ■ | இ | | ■ | ■ | மூ | | ■ | |
| பி | | | | | கொ | ■ | தி | ■ | ■ |

1. இ.......த்த நி.......ம் 2. திரு........ தூ.......ர்......ளோடும்
3. இறை.......ப.....று......ள 4. ம........த்துப்போ.......
5. நா....... அ.......வு......ன் 6. பி..... சை கே.......ப....ற்.....க
7. குதி.......தெ........ந்து 8. கொ........யா........யை
9. செ.......சா........ ..........கள் 10. மூ........க் க......லாக
11. அ......ள் பொழி.......பெற்...... 12. சை......பி......சு

பெயர் ........................................
முகவரி ........................................
பங்கு ........................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 11
## தூய யோவான் நற்செய்தி
## அதி 14 - 18

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ம் | யு | மை | ண் | உ | ம் | யு | ழி | வ |
| வா | ர் | ■ | கு | ■ | ள் | ■ | ந | இ | ■ |
| ளை | றா | அ | ளி | ■ | க | ன் | ண் | ரு | ள் |
| உ | கி | ண் | ர் | து | ர் | தே | ப | ப் | க |
| றை | டை | ணா | கா | ண | வீ | த் | ர் | பீ | ங் |
| யி | அ | ந் | ய் | யா | ழு | கா | க | ர் | ரு |
| ல் | னை | து | ந் | ள | அ | து | ளா | க | தி |
| போ | த | ■ | து | ர் | ■ | பா | ய் | ள் | ந் |
| டு | வே | ■ | ■ | ப | ணி | யா | ள | ர் | ழு |
| ■ | இ | வ் | வு | ல | க | ஆ | ட் | சி | எ |

1. வழியும் உண்மையும் 2. எழுந்திருங்கள்
3. நண்பர்களாய் இருப்பீர்கள் 4. துணையாளர்
5. வேதனை அடைகிறார் 6. அண்ணாந்து 7. வாளை உறையில் போடு 8. குளிர் காய்ந்து 9. இவ்வுலக ஆட்சி 10. அழுவீர்கள் 11. பணியாளர் 12. பாதுகாத்தேன்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

### பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
செல்வன் G. டிலாசன்
அந்தோனியார் வீதி,
பாலையூற்று.

பங்குபற்றியோர் - 72பேர்
சரியானவிடையளித்தோர் - 48பேர்

**2ம் பரிசு 300/=**
செல்வன். N. S. சதுஸ்கரன்,
இல.216/20, சுடரொளி வீதி,
பாலையூற்று.

**3ம் பரிசு 200/=**
J.D. யூட்ஸ் பிறைனி,
இல: 49, லிங்கநகர்,
திருகோணமலை.

01. வெ.பெனடிக்ஷன் ~ கும்புறுபிட்டி
02. எஸ், கிரிஷாந்தினி ~ இலிங்கநகர்
03. ச.டே. வோறன்பிள்ளை ~ உவர்மலை
04. டிரோன் நான்சி ~ உவர்மலை
05. டொ. ரொ. பியூலா ~ பேராலயம்
06. டானியலா R.F ~ பேராலயம்
07. P.S. ரெனிஸ்ஜோய் ~ இலிங்கநகர்ம.
08. பீ. ஹயிசிந் ~ இலிங்கநகர்
09. L.P. கிர்ஷாலி ~ பாலையூற்று
10. ஆர். எமில்ராஜ் ~ செல்வநாயகபுரம்ம.
11. ம. விவியானி ~ பாலையூற்று.
12. எப். ஆன். பிறிசில்டா ~ இலிங்கநகர்
13. அ. லக்ஷன் ~ குவாடலூபே
14. ஜி. கிஷோன் ~ பாலையூற்று.
15. டே. மெரூஷியன் பிள்ளை ~ உவர்மலை
16. பு. ரிட்சியா ~ பேராலயம்
17. சொ. கிஷானிகா ~ சாம்பல்தீவு
18. டி. அனிஸ்ரன் ~ இலிங்கநகர்
19. மார்டின் ரோய் ~ அன்புவழிபுரம்
20. எஸ். செல்டன ~ இலிங்கநகர்
21. ஆர். மேரி றொஷானி ~ உவர்மலை
22. சா. அ. அன்டனி ஜெரோம் ~ மூதூர்
23. ஜே. கே. லக்ஷிகா ~ பாலையூற்று.
24. ஜே. கே. ஷெரின் ~ பாலையூற்று.
25. ஏஸ். நிலானி அனிற்றா ~ சாம்பல்தீவு
26. போ. ஏஞ்சலா ~ நிலாவெளி
27. வி.விமன்சியா ~ நிலாவெளி
28. யோ. அருஷன் ~ அன்புவழிபுரம்
29. தே. சமில்டன் ~ நிலாவெளி
30. அ. கரோனி கீர்த்திகா ~ பேராலயம்
31. இ. யேசுரன் ~ பேராலயம்
32. ஆர். அப்ஸ்சரா ~ நிலாவெளி
33. சே. பீலிக்ஸ் செல்வராஜா ~ இலிங்கநகர்
34. பி.டிரோன் ~ முல்லைத்தீவு
35. ம. ஜெக்கலின் சுகந்தி ~ பேராலயம்
36. ம. கஃபினா ~ பேராலயம்
37. ரொ.ரொவீனா ~ பேராலயம்
38. டி. மெரீன்டன் ~ இலிங்கநகர்
39. S. சிங்கராஜா ~ இலிங்கநகர்
40. ஆன்வஜிரா R.F ~ பேராலயம்
41. சை. செரின் ~ பேராலயம்
42. D. இவாஞ்சலின் ~ உவர்மலை
43. L. ரக்ஷனா ~ உவர்மலை
44. ஆர். ஜே . தினேஸ்ராஜ் ~ செல்வநாயகபுரம்
45. சு.தாத்தேயு சீலி ~ இலிங்கநகர்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 20
## நீதித் தலைவர்கள் 01 ~ 10 அதிகாரங்கள்

1. இஸ்ரயேலருக்கு இறைவாக்கினரும், நீதித் தலைவியுமாக இருந்தவர் யார்?
விடை..........................................................
2. பெத்தேலின் முன்னாள் பெயர்?
விடை..........................................................
3. தோலா எத்தனை வருடங்கள் நீதித் தலைவராக இருந்தார்?
விடை..........................................................
4. கிதியோனால் கொல்லப்பட்ட இரு மிதியான் மன்னர்கள் யார்?
விடை..........................................................
5. ஆண்டவரின் தூதர் இஸ்ரயேல் மக்களுக்கு தோன்றியது எங்கே?
விடை..........................................................
6. அபிமெலக்கு இஸ்ரயேல் மக்கள் மீது எத்தனை ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்?
விடை..........................................................
7. மோவாப் மன்னனின் இறப்பிற்கு பிறகு இஸ்ரயேல் மக்கள் எத்தனை ஆண்டுகள் அமைதியாக இருந்தனர்?
விடை..........................................................
8. கிதியோன் பாளையத்தைச் சுற்றிப் போர் தொடுக்க முன் 300 பேர்களையும் மூன்றாகப் பிரித்து அவர்கள் கையில் கொடுத்த இசைக் கருவி என்ன?
விடை..........................................................
9. கிதியோனுக்கு ஆண்டவரின் தூதர் எங்கு தோன்றினார்?
விடை..........................................................
10. உம் மீது அன்பு கூர்வோர் ........................ கதிரவன் போல வாழட்டும்.

பெயர் ........................................
முகவரி ........................................
பங்கு ........................................
அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30. 09. 2015

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 18
## யோசுவா (1~12 அதிகாரங்கள்)
## விடைகள்

1. ஆக்கான் (07:01)
2. ஆண்டவரின் படைத்தலைவன் (05:14)
3. யோர்தானைக் கடக்கும்போது (03:07)
4. நீங்குதல் (05:09)
5. பேரிடர் (07:26)
6. 30 ஆயிரம் (08:03)
7. வாசிக்காதது (08:35)
8. மேரோம் நீரோடை (11:05)
9. கீல்காலில் (04:20)
10. 31பேர் (12:24)

**பங்குபற்றியவர்கள்: 53 பேர்**
**மிகச்சரியான விடையளித்தோர்:07 பேர்**

**பங்குபற்றிய அனைவருக்கும் பராட்டுக்களும் நன்றிகளும்**



### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி அருஷியா
இல: 101, காந்திநகர்
அன்புவழிபுரம்

**2ம் பரிசு 300/=**
செல்வி வேர்ஜினியா எல்டன்
இல: 12 முதல் தெரு, பாரதிபுரம்
அன்புவழிபுரம்

**3ம் பரிசு 200/=**
செல்வி ரொ. ரியோனா
இல: 52, பாத்திமா வீதி
திருகோணமலை

### பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வன் ஜி. டிலுஷன் பாலையூற்று
2. செல்வி அ. ஜெர்லின் பாலையூற்று
3. செல்வன் ஜி கிஷோன் பாலையூற்று
4. செல்வி அ. கரோலின் கீர்த்திகா பேராலயம்

**குறிப்பு:** *இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.*

## மறைக்கல்வி கற்போம் ~ 10

01. மறைக்கல்வியின் மையம் யார்?
**கிறிஸ்து**

02. திருச்சபை மறைக்கல்வியை எவ்வாறு கருதி வருகிறது?
**எக்காலத்திற்கும் தனது தூய கடமையாகவும் விட்டுக்கொடுக்க முடியாத உரிமையாகவும்**

03. மறைக்கல்வியின் நோக்கம் என்ன?
**இறைவார்த்தையின் ஒளியால் கிறிஸ்துவின் மறை உண்மைகளைப் புரிய வைப்பது**

04. மறைக்கல்வியின் சுற்றுமடல் எப்போது வெளியடப்பட்டது?
**2ம் வத்திக்கான் சங்கத்தில்**

05. தூய வின்சன் டீ பவுலின் திருநாள் எப்போது?
**புரட்டாதி 27**

06. புரட்டாதி 08ம் திகதி யாருடைய பிறந்த நாளை திருச்சபை கொண்டாடுகின்றது ?
**தூய கன்னி மரியாளின்**

07. தேசிய மறைக்கல்வி இயக்குனரின் பெயர் என்ன?
**அருட்பணி பியால் ஜானக்க பெர்னான்டோ**

08. கருவிலிருந்து கல்லறை வரை மறைக்கல்வி அளிக்கப்பட வேண்டும் என கூறிய திருத்தந்தை யார்?
**திருத்தந்தை 2ம் ஜான் பால்**

09. இயேசுவிற்கு எல்லா மொழிகளிலும் பிடித்த வார்த்தை எது?
**மன்னிப்பு**

10. மறையாசிரியர் என்பவர் யார்?
**மனிதனை மறுகிறிஸ்துவாக உருவாக்கும் மகத்தான மறைக்கல்வி பணியைத் தங்கள் முதல் நோக்கமாக கொண்டு சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும், முதியோருக்கும் விசுவாச வாழ்வில் வளர பயிற்சியளிக்கும் சிறந்த பணியாளர்களே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் உருவாக்கமும் குடும்ப ஒன்றுகூடலும்




## பாலையூற்றுப் பங்கின் முதியோர் சங்கத்தினரின் திருவிழா



## குவாடலூபே திருத்தல பிறிமரியா கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் 2015 ஆண்டின் முதல் 06 மாதகால முன்னேற்ற செயற்பாடுகள்





## எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரால் புதிய ஆயரை வரவேற்றல் நிகழ்வு






## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

அன்னை மடியில் 1974 † 08 † 17



இறைவன் அடியில் 2014 † 08 † 18


**அமரர் அருட்பணி தே. எட்வின் (அமதி)**

ஆண்டு ஒன்று கடந்து விட்டாலும்
உமது அன்பு என்றும் மாறாது
பாசத்தோடு பழகிய நாட்கள்
எம் நெஞ்சை விட்டு அகலாது
ஒரு வருடம் என்ன ஓராயிரம் வருடமானாலும்
உமது சேவை இம் மண்ணில்
என்றும் நிலைத்திருக்கும் ~ நீர்
இம் மண்ணை விட்டு பிரிந்து போனாலும்
எம் மனதை விட்டு ஒருநாளும் பிரிய மாட்டீர் தந்தையே

தகவல்: பங்குத்தந்தை, பங்கு மக்கள்
தூய யுவானியார் ஆலயம்
சாம்பல்தீவு, திருகோணமலை

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

உதித்தது 06 ♣ 01 ♣ 1928



மறைந்தது 30 ♣ 09 ♣ 2010

அமரர்.
**தோமஸ் இருதயநாதர்**

'என்னிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்'
என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல
உள்ளன அப்படி இல்லையெனில் உங்களுக்கு இடம்
ஏற்பாடு செய்யப்போகிறேன் என்று சொல்லியிருப்பேனா?
யோவான்14:2
மண்ணில் வாழ்ந்து சென்ற அப்பா
விண்ணில் இறைவன் இன்பம் தருவார்

தகவல்: குடும்பத்தார்
கோணேசபுரம், உவர்மலை
திருகோணமலை

சுமேரியர்கள் அரசர்களை புதைக்கும் போது அரசர்கள் பயன்படுத்திய பொருட்களையும் சேர்த்துப் புதைத்தனர். ஊர் என்னும் இடத்திலிருந்த ஒரு அரச கல்லறையில் ஏராளமான விலையுயர்ந்த பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டன. படத்தில் காணப்படும் ஆடு தங்கம் மற்றும் வெள்ளியால் உருவாக்கப்பட்டது. அது ஆிரகாம் காலத்திற்கும் ஏறக்குறைய 500 ஆண்டுகள் முந்தியது என கணக்கிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org